### இந்திய வரலாற்றைப் புரட்டிப்போட்ட புரட்சியாளர்

# சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் புகழ் ஓங்குக!

## நினைவு நாளையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, நவ. 28-

முன்னாள் பிரதமர், சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், "இந்திய வரலாற்றைப் புரட்டிப்போட்ட புரட்சியாளர் எனவும் சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் புகழ் ஓங்குக" என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.



மேனாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் நினைவு நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:-

**இந்திய வரலாற்றைப் புரட்டி போட்ட புரட்சி யாளர் - சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் புகழ் ஓங்குக!**

**உயர்கல்வியிலும் வேலைவாய்ப்புகளிலும் - தலைமைப் பொறுப்புகளிலும் நமது திறமையால் சாதனை படைத்து அவருக்கு நன்றி செலுத்து வோம்! சாதிக்கப் பிறந்தவர்களுக்குச் சாதி தடையில்லை என்பதை நிறுவுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில் 'திராவிட மாடல்' அரசின் திட்டங்களால்

# பால் உற்பத்தியில் புதிய வரலாறு படைக்கும் தமிழ்நாடு!

## பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் அறிக்கை!

**சென்னை, நவ. 28-**

**கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தும் திராவிட மாடல் அரசின் திட்டங்களால் பால் உற்பத்தியில் புதிய வரலாறு படைக்கும் தமிழ்நாடு என்று பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-



தமிழ்நாடு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவி யேற்றது முதல் அவரின் சீரிய வழிக் காட்டுதலால் தமிழ்நாடு பால்வளத் துறை மிகச்சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. பால் உற்பத்தியில் வர லாற்றில் இல்லாத அளவிற்குத் தமிழ்நாடு ஒவ்வொரு ஆண்டும் புதிய உச்சத்தை எட்டி வருகிறது.

தேசிய பால்வள மேம்பாட்டு வாரி யம் (NDDB) வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் படி 2017முதல் 2020 வரை முறையே 7.742, 8.362, 8.759 மில்லியன் டன்களாக இருந்த தமிழ்நாட்டின் பால் உற் பத்தி 2021 முதல் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே 9.790, 10.107, 10.317 மில்லியன் டன் களாக உயர்ந்திருக்கிறது.

தனிநபருக்கு கிடைக்கும் பாலின் அளவு (per capita availability) 2019-2020 ஆண்டில் நாளொன் றுக்கு 316 கிராமாக இருந்தது 2022-2023 ஆம் ஆண்டில் அது 369 கிராமாக உயர்ந்திருக்கிறது.

கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தும் திராவிட மாடல் அரசின் திட்டங்களால்தான் இந்த வளர்ச்சி சாத்தியப்பட்டிருக்கிறது.

2022--23ம் ஆண்டு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர் களுக்கு ரூ.27.60 இலட்சமும் மற் றும் இணையத்தின் பணியாளர் களுக்கு ரூ.12.58 இலட்சமும் உற்பத்தியுடன் இணைந்த ஊக் கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2023-24ம் ஆண்டு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி யாளர்கள் ஒன்றியங்களின் பணி யாளர்களுக்கு ரூ.25.85 லட்சமும் மற்றும் இணையத்தின் பணியா ளர்களுக்கு ரூ.11.61 இலட்சமும் உற்பத்தியுடன் இணைந்த ஊக் கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

2022-23ம் ஆண்டில் 1.39 லட் சம் பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.1,951.74 இலட்சம் போனஸ் ஆகவும் ரூ.3432.62 லட்சம் பங்கு ஈவுத்தொகையாகவும் ரூ.38.63 இலட்சம் ஆதரவு தள்ளுபடியும் வழங்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர்களின் 5 இலட்சம் கறவை மாடுகளுக்கு 85 விழுக்காடு மானியத்தில் கால்நடை காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுபோன்று பால் உற்பத்தியா ளர்களின் நலனையும் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு பல் வேறு முன்னெடுப்புகளை மேற் கொள்வதால்தான் இந்த வளர்ச்சி சாத்தியப்பட்டிருக்கிறது. முதலமைச் சரின் வழிக்காட்டுதல்களால் பால் வளத்துறை எதிர்காலங்களில் இன் னும் புதிய சாதனைச் சிகரங்களை எட்டும்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.எஸ். இராஜகண்ணப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; அ.தி.மு.க. ஆட்சியில், டெல்டா மாவட்டங்களை, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என அறிவித்து விட்டதாகத் தோள் தட்டிக் கொண்டார்களே ?

**பட்டணம் :** ஆமாமய்யா; அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, அப்படி அறிவிப்பதற்கான எந்தவிதமான பரிந்துரையும், ஒன்றிய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திற்கு வரவில்லை என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு அறிவித்துள்ளது.

**இந்த அறிவிப்பின் மூலம் அ.தி.மு.க. ஆட்சியின் சாயம் வெளுத்துவிட்டது !**

**இது தொடர்பாக, 'குற்றம் சுமத்துவது கேவலமான அரசியல்' என்று அ.தி.மு.க. ஜெயக்குமார், பொங்கி வழிந்திருக்கிறார்.**

**அறியாமையான - கேவலமான ஆட்சியை நடத்திவிட்டு, கேவலமான அரசியல் என்று கோபம் கொப்பளிக்கக் குதிப்பது, மல்லாந்து படுத்துக்கொண்டு காறி உமிழ்வதற்கு ஒப்பானதுதானே !**

# நெல்லை மாநகரில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா!

நெல்லை.நவ.28-

நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கழக இளை ஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாள், இளைஞர்களின் எழுச்சி நாளாக கொண்டா டும் வகையில் நெல்லை சட்ட மன்ற தொகுதிக்கு உட்பட்ட கழக சொந்தங்கள் 1048 நபர் களை கௌரவிக்கும் விழா வாக வருகிற 04.12.2024 அன்று மாலை 4 மணி அள வில் நெல்லை கண்ணன் சாலை டவுண் பார்வதி தியேட்டர் அருகில் நடைபெ றும், இந்நிகழ்வு நெல்லை மத் திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலை மையில் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப்,பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிர மணியன்(தச்சை) அன்டன் செல்லத் துரை(பாளை)சாகுல் ஹமீது (மேலப்பாளையம்)துணை செயலாளர் கள் அப்துல்கை யூம்,பாலமுருகன் என்ற பிரபு,சுதா மூர்த்தி, பொருளா ளர் பூக்கடை அண்ணா துரை,மாநில சட்ட திட்ட தீர் மானக் குழு உறுப்பினர் சுப. சீதாராமன்,மாநில நெசவா ளர் அணி செயலாளர் பெரு மாள்,மாநில மகளிர் தொண் டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநில வர்த்தக அணி இணைச் செய லாளர்மாலைராஜா,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பேச்சிபாண்டியன்,ஏ.எல். எஸ்.லெட்சுமணன்,மாநக ராட்சி மேயர் ராமகிருஷ் ணன்,துணை மேயர் ராஜ், மாவட்ட கழக நிர்வாகிகள் முருகன்,எஸ். வி.சுரேஷ், தர் மன், கிரிஜா குமார், வண்ணை சேகர், மானூர் ஒன்றிய செய லாளர்கள் மாரியப்பன் (தெற்கு) அருள்மணி (கிழக்கு) அன்பழகன் (மேற்கு)ஒன்றிய பொறுப்பாளர் வேலங்குளம் கண்ணன்(பாளை வடக்கு) பேரூர் கழக செயலாளர்கள் செல்வபாபு(சங்கர் நகர்)பேச் சிகுட்டி (நாரணம்மாள்புரம்) நெல்லை மத்திய மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையாபாண்டியன்,27 ஆவது மாமன்ற உறுப்பினர் உலகநாதன், மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பா ளர் வில்சன் மணித்துரை, மாவட்ட வர்த்தக அணி தலை வர் அவதார் ஷாஜகான்,மாந கர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. மாநகர செயலாளர்சு.சுப்பிரமணியன் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் கழக முதன்மை செயலாளர்,நக ராட்சி நிர்வாக துறை அமைச் சர்,நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் ஆகி யோர் பங்கேற்று நெல்லை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கழக சொந்தங்கள் 1048 நபர்களை கௌரவித்து தலா ரூபாய் 6000 மதிப்பி லான மிக்ஸியை வழங்குகின் றனர்.

நிகழ்வில் சிறப்பு விருந்தின ராக மாநில நெசவாளர் அணி துணை செயலாளர், பாளை தொகுதி பார்வையாளர் வசந் தம் ஜெயக்குமார், மாநில வர்த்தக அணி இணைச் செய லாளர்,நெல்லை தொகுதி பார்வையாளர் ச.முத்துச் செல்வி, தலைமை கழக பேச் சாளர்கள் சிவாஜி ஜெ.கிருஷ் ண மூர்த்தி,கவிஞர் மூர்த்தி, நெல்லை முத்தையா, திரா விட மணி சி.பா.ராவணன், நெல்லை ரவி,பாம்பு கிருஷ் ணன, நெல்லை மணி,மில் குமார், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களால் கழ கத்திற்கு அறிமுகப்படுத்தப் பட்ட இளம் பேச்சாளர்கள் செல்வி.ரகுமாள்,அகமது சுல் தானா,அர்ஜனா,உட்பட நெல்லை பேட்டை பகுதி, தச்சை பகுதி,பாளை பகுதி, மேலப்பாளையம் பகுதி,கழக நிர்வாகிகள்,வட்ட கழக செய லாளர்கள், மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தொண்டர்கள்,மூத்த முன் னோடிகள் கலந்து கொள்கின் றனர்.

நிகழ்ச்சி நிறைவில் நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி நன்றியுரையாற்றுகிறார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடு களை நெல்லை மாநகர செய லாளர் சு.சுப்பிரமணியன் செய்துள்ளார்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

### முகையூர் வடக்கு, முகையூர் தெற்கு ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகள் ! திருத்தம்

#### தலைமைக் கழக அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செவ் வனே நடைபெறவும் 'முரசொலி'யில் ஏற்கனவே வெளியி டப்பட்ட விழுப்புரம் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங் கள் பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தம் செய்யப்படு கிறது.

விழுப்புரம் தெற்கு மாவட்டம், முகையூர் வடக்கு ஒன்றி யத்தில் இடம் பெற்றிருந்த **முகையூர்** ஊராட்சி **முகையூர் தெற்கு ஒன்றியக் கழகத்தின்** கீழும்;

முகையூர் தெற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **புத்தூர், கொல்லூர்** ஆகிய 2 ஊராட்சிகள் **முகையூர் வடக்கு ஒன்றியக் கழகத்தின்** கீழும் செயல்படும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 26.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### விழுப்புரம் தெற்குமாவட்டம் - முகையூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

#### தலைமைக் கழக அறிவிப்பு

விழுப்புரம் தெற்கு மாவட்டம், முகையூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் திருமதி பிரேமா (எ) லூர்துமேரி அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக, தான் வகித்த வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக திரு. **எஸ்.லூயிஸ்** (ரயில்வே புது நகர், முகையூர் 605 755, விழுப்புரம் மாவட்டம்) அவர்கள் முகையூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 26.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



வேலூர் மாவட்டதி.மு.க. அலுவலகத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வதுபிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ பொதுமக்களுக்கு பிரியாணி வழங்கினார். அருகில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மாநகராட்சி மேயர் சுஜாதா, மாவட்ட ஊராட்சி குழுதலைவர் மு.பாபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த் தாண்டன், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி பேரூர் கழக செயலாளர்கள் மாநில கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்!

# தென்காசி தெற்கு மாவட்டத்தில் நல உதவிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வழங்கினார்!

தென்காசி.நவ.28-

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் லட்சியம் அசோசியேஷன் சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன் னிட்டு 19 பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவி கள் மற்றும் சிறுவர், சிறுமிகள் உள்பட 1000 பேர் கள் பங்கேற்ற யோகா மற் றும் ஸ்கேட்டிங் போட்டி குற்றாலம் செய்யது மெட் ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப் பாளர் வே.ஜெயபாலன் பங் கேற்று போட்டியை துவக்கி வைத்தார்.

நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் கென் னடி,மாவட்ட பொருளா ளர் ஷெரிப், தலைமை செயற்குழு உறுப்பினர் சேக் தாவுது,பொதுக்குழு உறுப்பி னர் ரஹீம்,

ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், வல்லம் திவான் ஒலி,நகர செயலா ளர் கள் அப்பாஸ்,கணே சன்,பேரூர் செயலாளர்கள் சுடலை,குட்டி,முத்தையா, பண்டாரம்,கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்கள் ஷேக் அப்துல்லா (தென் காசி) திவ்யா மணிகண்டன் (ஆலங்குளம்) அணி அமைப் பாளர்கள் கிருஷ்ணராஜா, ரமேஷ்,வீராணம் சேக் முக மது, கருப்பணன்,குற்றாலம் சுரேஷ்,கரிசல் வேலுச்சாமி, ரகுமான் சாதத், செந்தூர் பாண்டியன்,ராமராஜ், அண் ணாமலை,

செய்யது மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி முதல்வர் பாதுஷா,செய்யது ஹில்வியூ நர்சரி பிரைமரி பள்ளி முதல் வர் லக்கி சந்திரபால்,லட்சி யம் அசோசியேசன் நிறுவ னர் பாலகணேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# அண்ணாவிடம் கடன் வாங்கி அண்ணன் வாழ்த்துகிறேன்!



ஒருநாள்
கலைஞரும் நானும்
கோபாலபுரத்தில்
உரையாடிக்
கொண்டிருந்தோம்

உதயநிதி தன் மனைவி
கிருத்திகாவோடு வந்தார்;
நின்றுகொண்டே பேசினார்

கலைஞர் மறுத்த ஒருகருத்தை
தன் வாதத்தை முன்னிறுத்திச்
சாதித்துச் சென்றார்

அப்போதே
தெரிந்துகொண்டேன்
வலிவும் தெளிவும் மிக்க
வல்லவர் இவரென்று

உதயநிதி
பேரீச்சம் பழம்போல்
மென்மையானவர்; ஆனால்
அதன் விதையைப்போல்
உறுதியானவர்

சின்னச் சின்ன எதிர்ப்புகள்
இவரைச் சிதைப்பதில்லை

குன்றிமணி முட்டிக்
குன்றுகள் சாய்வதில்லை

காலம் இவரை
மேலும் மேலும்
செதுக்கும்; புதுக்கும்

"தம்பீ வா
தலைமையேற்க வா"
அண்ணாவிடம் கடன்வாங்கி
அண்ணன் வாழ்த்துகிறேன்

–கவிப்பேரரசு
**வைரமுத்து**